இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அத்திமரத்திலிருந்து ஓர் உண்மையைக் கற்றுக் கொள்ளுங்கள். அதன் கிளைகள் தளிர்த்து இலைகள் தோன்றும்போது கோடைக் காலம் நெருங்கி வந்துவிட்டது என நீங்கள் அறிந்துகொள்கிறீர்கள். அவ்வாறே இவை நிகழ்வதைக் காணும்போது மானிடமகன் கதவை நெருங்கி வந்துவிட்டார் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளுங்கள். இவையனைத்தும் நிகழும்வரை இத்தலைமுறை ஒழிந்து போகாது என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகும்; ஆனால் என் வார்த்தைகள் ஒழியவேமாட்டா. (மாற்கு 13: 28-31)

# 5-வது உலக ஏழைகள் தினம்

# ‘வறுமை சுயநலத்தின் விளைவு’

## ‘ஏழைகள் எப்போதுமே உங்களோடு இருக்கின்றார்கள்’ (மாற்கு 14:7)



## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சிறப்பு செய்தி

‘ஏழைகள் எப்போதுமே உங்களோடு இருக்கின்றார்கள்’ (மாற்கு 14:7)

பாஸ்கா பண்டிகைக்கு சில நாட்களுக்கு முன்பு, பெத்தானியாவில், தொழுநோயாளி என்று அழைக்கப்படும் சைமனின் வீட்டில் உணவருந்தும் போது பெண்மணி ஒருவர் ஒரு குடுவையில் விலைமதிப்பற்ற தைலத்துடன் வந்து இயேசுவின் தலையில் ஊற்றினார். இது பெரும் வியப்பை ஏற்படுத்தியதுடன் இருவேறு விளக்கங்களுக்கு வழிவகுத்தது.

முதலாவதாக, சீடர்கள் உட்பட அங்கிருந்த சிலர் அந்தத் தைலத்தின் மதிப்பைக் கருத்தில் கொண்டு அப்பெண்ணின் நடவடிக்கையை குறைக்கூறினர். அது ஒரு தொழிலாளியின் வருடச் சம்பளத்திற்குச் சமமான சுமார் 300 தெனாரியங்கள் என்று வியந்தனர். அதை விற்று அதன் மூலம் கிடைக்கும் தொகையை ஏழைகளுக்குக் கொடுத்திருக்க வேண்டும் என்று நினைத்தார்கள். யோவான் நற்செய்தியில், யூதாஸ் இந்த நிலைப்பாட்டை எடுக்கிறார்: "ஏன் இந்த தைலம் முந்நூறு தெனாரிக்கு விற்கப்படவில்லை மற்றும் ஏழைகளுக்கு கொடுக்கப்படவில்லை?" என்று கேள்வி எழுப்புகிறார்.

இரண்டாவது விளக்கம் இயேசுவினுடையதாக அமைகிறது. அவர் அந்தப் பெண்ணின் செயலைப் பாராட்டுகிறார். “அவரை விடுங்கள். ஏன் அவருக்குத் தொல்லை கொடுக்கிறீர்கள்? அவர் எனக்குச் செய்தது முறையான செயலே” என்றார். (மாற்கு 14:6) ‘என் அடக்கத்திற்காக இவர் முன்னதாகவே என் உடலுக்குத் தைலம் பூசிவிட்டார்’ என்கிறார். இயேசுவின் பதிலானது, அங்கிருந்த மற்றவர்கள் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு இருந்தது. அவர் ஏழைகளில் முதன்மையானவர். அவர் ஏழைகளில் ஏழை ஏனென்றால் அவர் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறார் என்பதை இயேசு அவர்களுக்கு நினைவூட்டினார். ஏழைகள், தனிமையில் இருப்பவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள் மற்றும் பாகுபாட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்காக வும், இயேசு மகன் அந்த பெண்ணின் நடவடிக்கையை ஏற்றுக்கொண்டார். அவர் அப்பெண்ணின் செயலை நற்செய்திக்கான பணியுடன் தொடர்புபடுத்துகிறார். “உலகம் முழுவதும் எங்கெல்லாம் நற்செய்தி அறிவிக்கப்படுமோ அங்கெல்லாம் இவர் செய்ததும் எடுத்துக் கூறப்படும்; இவரும் நினைவு கூறப்படுவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” (மாற்கு 14:9) என்று கூறினார்.

இயேசுவால் வெளிப்படுத்தப்பட்ட கடவுளின் முகமானது, ஏழைகள் மீது அக்கறையுள்ள ஒரு தந்தையின் முகம். எல்லாவற்றிற்கும் மேலாக ஏழ்மை என்பது விதியின் விளைவு அல்ல. மாறாக அவர் நம்மிடையே இருப்பதை சுட்டிக்காட்டும் ஒரு உறுதியான அடையாளம் என்று இயேசு கற்பிக்கிறார். நாம் எப்போது, எங்கு வேண்டுமானாலும் அவரைக் காண இயலாது. ஆனால் ஏழைகளின் வாழ்க்கையில், அவர்களின் துன்பத் துயரங்களில் அவர்கள் வாழ வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் மனிதாபிமானமற்ற சூழ்நிலைகளில் அவரைப் பார்க்கிறோம் என்கிறார் இயேசு.

ஏழைகள் எப்போதும் எல்லா இடங்களிலும், நமக்கு நற்செய்தி அறிவிக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் கடவுளின் உண்மையான முகத்தை புதிய வழிகளில் நாம் கண்டறிய உதவுகிறார்கள். அவர்கள் நமக்குக் கற்பிக்க நிறைய இருக்கிறது. அவர்களில் கிறிஸ்துவைக் கண்டறியவும், அவர்களின் துயரங்களுக்காக நாம் குரல் கொடுக்கவும், அவர்களின் நண்பர்களாகவும் அவர்களுக்குச் செவிசாய்க்கவும், அவர்களைப் புரிந்துகொள்ளவும், அவர்கள் மூலம் கடவுள் நமக்குத் தெரிவிக்க விரும்பும் மறைபொருளான ஞானத்தை வரவேற்கவும் நாம் அழைக்கப்பட்டுள்ளோம். இயேசு ஏழைகளின் பக்கம் மட்டுமல்ல; அவர்களுக்கான தனது பங்கையும் ஆற்றுகிறார்.

ஏழைகள் எப்பொழுதும் நம்முடன் இருப்பார்கள். நாம் அவர்களை அலட்சியப் படுத்தக்கூடாது. ஏழைகள் நமது சமூகத்திற்கு வெளியே உள்ளவர்கள் அல்ல. மாறாக நமது சகோதர சகோதரிகள். அவர்களின் துன்பங்களை நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும். அவர்களின் சிரமங்களையும் அவர்கள் ஓரங்கட்டப்படுவதையும் நாம் வேடிக்கைப் பார்க்க இயலாது. அவர்கள் இழந்த கண்ணியத்தை மீட்டெடுக்க அவர்களுக்கு தேவையான சமூக தேவைகளை உறுதி செய்யவும்.

சுருக்கமாக கூறினால் நம்பிக்கையாளர்கள் இயேசுவை நேரில் பார்க்கவும், தங்கள் கைகளால் அவரைத் தொடவும் விரும்பினால், எங்கு திரும்புவது என்று தெரிந்து கொள்ளுங்கள். ஏழைகள் கிறிஸ்துவின் புனிதமும் அவரது உடனிருப்பின் வெளிப்பாடுமாகிறார்கள். அவர்கள் பக்கம் திரும்புங்கள்.

கிறிஸ்துவின் நற்செய்தியானது ஏழைகள் மீது சிறப்பு அக்கறை காட்டவும், எப்போதும் புதிய வறுமை வடிவங்களை உருவாக்கும் பல்வேறு தார்மீக மற்றும் சமூக சீர்குலைவுகளை அடையாளம் காணவும் நம்மை அழைக்கிறது. ஏழைகள் அவர்களின் நிலைக்கு ஒருவகையில் பொறுப்பாளிகள் என்றபோதிலும், ஒரு சில சலுகை பெற்ற குழுக்களின் நலன்களில் கவனம் செலுத்தும் பொருளாதார அமைப்புகளுக்கு அவர்கள் தாங்க முடியாத சுமையாக இருக்கிறார்கள் என்ற கருத்து வளர்ந்து வருவதாகத் தெரிகிறது.

கடந்த ஆண்டு ஏழைகளின் எண்ணிக்கையைப் பெருக்கும் மற்றொரு இடர்பாட்டை நாம் அனுபவித்தோம்: மில்லியன் கணக்கான மக்களைத் தொடர்ந்து பாதிக்கும் கோவிட்-19 தொற்றுநோயானது, துன்பத்தையும் மரணத்தையும் மட்டுமல்ல பெருமளவில் வறுமையையும் பெருக்கியது. சில நாடுகள் தொற்றுநோயால் மிகக் கடுமையான விளைவுகளைச் சந்தித்து வருகின்றன, அதனால் மிகவும் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளைக்கூட பூரத்தி செய்ய இயலாத சூழலில் அந்நாடுகள் தவிக்கின்றன.

வறுமை என்பது இயற்கையின் விளைவு அல்ல; அது சுயநலத்தின் விளைவு. அக்கறையற்ற சமூகத்தின் அலட்சியத்தை மட்டுமே அடிக்கடி சந்திக்கும் மில்லியன் கணக்கான ஏழைகளுக்கு நாம் எவ்வாறு உறுதியான பதிலை வழங்க முடியும்? சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களைவதற்கும், அடிக்கடி மிதிக்கப்படும் மனித மாண்புகளை மீட்டெடுப்பதற்கும் எந்த நீதிப் பாதையைப் பின்பற்ற வேண்டும்?

ஒற்றுமை மற்றும் பகிர்வு பற்றி ஏழைகள் நமக்கு அடிக்கடி கற்பிக்கிறார்கள் என்பது உண்மை. அவர்கள் சில அடிப்படை வசதிகள் இல்லாதவர்களாக இருக்கலாம், ஆனால் கடவுளின் மக்களாகிய அவர்களின் கண்ணியத்தை எதனாலும் யாராலும் பறிக்க முடியாது. அவர்கள் வெறுப்பு, பதட்டம் மற்றும் சில சமயங்களில் வன்முறைக்கு வழிவகுக்கும் கோரிக்கைகளுக்குப் பலியாகிறார்கள்.

இந்த காரணங்களுக்காக வறுமைக்கு வேறுபட்ட அணுகுமுறை தேவைப்படுகிறது. இப்போது உலகை உலுக்கிக்கொண்டிருக்கும் புதிய வடிவிலான வறுமையை எதிர்கொள்ளும் திறன் கொண்ட தொலைநோக்கு சமூக மாதிரியை அரசாங்கங்களும் உலக நிறுவனங்களும் மேற்கொள்ள வேண்டியதற்கு சவால் எழுந்துள்ளது.

ஏழைகளின் நிலைக்கு அவர்களே காரணம் என்று கருதப்பட்டு அவர்கள் ஓரங்கட்டப்பட்டால், மக்களாட்சி என்ற கொள்கைக்கு ஆபத்து வருவதோடு, ஒவ்வொரு சமூகக் கொள்கையும் செயலற்று போய்விடும். ஏழைகளின் விடயத்தில் நாம் பெரும்பாலும் திறமையற்றவர்களாக உள்ளோம் என்பதை மிகுந்த மனத்தாழ்மையுடன் ஒப்புக்கொள்ள வேண்டும். நாம் அவற்றைப் பற்றி மேலோட்டமாகப் பேசுகிறோம்; நாம் ஆய்வுகள் செய்கிறோம், ஆனால் கிடைக்கப்பட்ட பெரும் புள்ளி விவரங்களை பதிவு செய்வதோடு நிறுத்திக் கொள்கிறோம். நமது ஆய்வுகள் வறுமையைப் போக்கும் நிறைவான வாழ்க்கையை வாழ்வதற்கு தேவையான நடவடிக்கைகளை சுதந்திர மாக அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட ஆக்கபூர்வமான திட்டமிடலுக்கு நம்மைத் தூண்ட வேண்டும்.

*‘ஏழைகள் எப்போதுமே உங்களோடு இருக்கிறார்கள் (மாற்கு 14:7)* "உங்கள் சகோதர சகோதரிகளில் ஒருவருக்கு... தேவை இருந்தால், அவர்களின் தேவையின் பொருட்டு உங்கள் இதயத்தை கடினப் படுத்தவோ, உங்கள் கையை மூடவோ வேண்டாம். அதற்கு பதிலாக, நீங்கள் அவர்களுக்கு உங்கள் கையைத் திறந்து, அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு அவர்களுக்கு தாராளமாக உதவிக்கரம் நீட்டுங்கள். ஒவ்வொருவரும் தம்முள் தீர்மானித்தபடியே கொடுக்கட்டும். மனவருத்தத்தோடோ கட்டாயத்தினாலோ கொடுக்க வேண்டாம். முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர்’ (2 கொரி 9:7) என்கிறார் பவுல் அடிகள்.

இரக்கமுள்ளவர்கள் பற்பல தேவையிலிருக்கும் ஏழைகளுக்கு துறைமுகம் போன்றவர்கள்: துறைமுகம் கப்பல் விபத்தில் சிக்கிய அனைவரையும் வரவேற்று ஆபத்திலிருந்து விடுவிக்கிறது அல்லவா?

ஐந்தாவது ஆண்டில் உலக ஏழைகள் தினக் கொண்டாட்டம் நமது உள்ளூர் திருஅவை பங்குகள், ஏழைகள் எங்கிருந்தாலும் தனிப்பட்ட முறையில் அவர்களைச் சந்திப்பதன் வழி நற்செய்தி பரப்புதலை ஊக்குவிக்கும் என்பது எனது நம்பிக்கை. ஏழைகள் நம் கதவைத் தட்டும் வரை நாம் காத்திருக்க முடியாது; அவர்களை வீடுகளிலும், மருத்துவமனைகளிலும், முதியோர் இல்லங்களிலும், தெருக்களிலும், இருண்ட மூலைகளிலும் இடங்களிலும் நாம் அவர்களை அவசரமாகச் சென்றடைய வேண்டும்.

ஏழைகள் நம் மத்தியில் என்றும் இருக்கிறார்கள். நாமும் நம்மை ஏழைகளாகக் கருத வேண்டும். ஏனென்றால் நாம் அவர்களை நம் வாழ்வின் ஒரு பகுதியாகவும், நமது மீட்பின் ஒரு கருவியாகவும் ஏற்பதன் மூலம் மட்டுமே அவர்களை அடையாளம் காண முடியும்.

**இன்று 14 நவம்பர் 2021**

**‘உலக ஏழைகள் தினம்’**

## அடுத்தாண்டு புனிதராக உயர்த்தப்படவுள்ளார் அருளாளர் தேவசகாயம்

வத்திக்கான்: இந்தியாவின், தமிழ்நாட்டில் அருளாளராக ஏற்கப்படுள்ள தேவசகாயம் அவர்களை, புனிதராக உயர்த்தும் விழா, 2022ம் ஆண்டு, மே மாதம் இடம்பெறும் என்று வத்திக்கான் அறிவித்துள்ளது.



இவ்வாண்டு மே மாதம் 3-ம் திகதியே, ஏழு அருளாளர்களை புனிதர்களாக அறிவிப்பதற்குரிய அனைத்து வழிமுறைகளும் நிறைவு செய்யப்பட்டிருந்தாலும், கோவிட் பெருந்தொற்று உருவாக்கிய பிரச்சனைகளால், இவர்களை புனிதர்களாக உயர்த்தும் நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டு தற்போது, அந்நிகழ்வு, 2022ம் ஆண்டு மே மாதம் 15ம் தேதி நடைபெறும் என்று முடிவு செய்யப் பட்டுள்ளது.

தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டத்தில் கொல்லப்பட்ட அருளாளர் தேவசகாயம் அவர்களோடு இணைந்து மேலும் 6 அருளாளர்களை அன்றைய தினம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் கொண்டாடும் திருப்பலியில் புனிதர்களாக அறிவிக்கப்பட உள்ளனர்.

அருள்பணியாளர்களாக பணியாற்றி உயிர் துறந்த அருளாளர்கள், César de Bus, LuigiMaria Palazzolo, Giustino Maria Russolillo, Charles de Foucauld, மற்றும், அருள் சகோதரிகள் Maria Francesca di Gesù, Maria Domenica Mantovani, ஆகிய ஆறு பேர், மற்றும், இலாசர் என்ற பெயரைத் தாங்கிய பொதுநிலையினரான அருளாளர் தேவசகாயம் ஆகியோர் புனிதர்களாக உயர்த்தப்படுவர் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

இவர் தமிழ்நாடு, குமரி மாவட்டம் மார்த்தாண்டம் அருகே நட்டாலம் கிராமத்தில் 1712-ம் ஆண்டு ஏப்ரல் 23-ந் தேதி வாசுதேவன் நம்பூதிரி-தேவகியம்மா தம்பதிக்கு மகனாக தேவசகாயம் பிறந்தார். இவருக்கு பெற்றோர் வைத்த பெயர் நீலகண்ட பிள்ளை. இவர் கத்தோலிக்க கிறிஸ்தவத்தில் இணைந்த பின்பு தனது பெயரை தேவசகாயம் என மாற்றிக்கொண்டார். கிறிஸ்தவ விசுவாசத்திற்காக 1752-ம் ஆண்டு ஜனவரி 14-ந் தேதி அப்போதைய ஆட்சியாளர்களால் சுட்டு கொல்லப்பட்டார்.

## புலம்பெயர்ந்தோர் மத்தியில் இரக்கத்தோடான மறைத்தூதுப் பணி

**பெஸ்தாரி ஜெயா:** ஒதுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட மற்றும் பலவித தேவையில் அல்லலுறுவோருக்கான கோலாலம்பூரைச் சேர்ந்த 15 பேர் கொண்ட கத்தோலிக்கக் குழுவினர், கடந்த மாதம் 31-ம் நாளன்று ஏறக்குறைய 100km கடந்து, செகிச்சான் பகுதியில் வறுமையில் வாடிய 70 புலம்பெயர்ந்தோரைச் சந்தித்து உரையாடினர். பெரும்பாலும் விவசாயிகளான இந்த இந்தோனேசிய கத்தோலிக்கர்கள் அனைவரும் குறைந்த வருமானம் கொண்டவர்களாவர்.



இங்குள்ள புனித வனத்து சின்னப்பர் பங்கின் பணியாளரான ஷேரன் ஜஸ்தினா மற்றும் தென்னைமரம் தோட்ட புனித அந்தோணியர் சிற்றாலயத்தைச் சேர்ந்த சின்னம்மாள் ஆகியோரின் இறைவேண் டல் நிகழ்வு இடம் பெற்றது. பின்னர் கோலாலம்பூரிலிருந்து கொணர்ந்த 1500 kg எடையிலான பொருள்கள் பகிர்ந்தளிக்கப்பட்டது.

அந்நிகழ்வில் இணைந்திருந்த பங்குத் தந்தை அருள்பணி. V.A. மைக்கல் அவர்கள் அன்றைய நற்செய்தி வாசகத்தை மேற்கோள் காட்டி, அண்டை அயலாரை நாம் அன்பு செய்து வாழ்வதன் அவசியத்தைப் பகரிந்து கொண்டார். இதற்கு முன்பதாக, பங்குத் தந்தையின் அனுமதியோடு, இந்த கோலாலம்பூர் பணிக்குழுவினர் அசாம் ஜாவா மற்றும் கோலாசிலாங்கூர் பகுதிகளில் உள்ள சிற்றாலயங்களிலும் இறைவேண்டல் நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.



## ‘ஆழத்தில் வலையைப் போடுங்கள்’ குடும்ப நலவாழ்வு பணிக்குழு கருத்தரங்கு

**கோலாலம்பூர்:** தீபகற்ப மலேசியா மேய்ப்புப்பணி குழுவின் 2021, நவம்பர் மாத கருப்பொருளான ‘அகமகிழுங்கள், மீண்டும் கண்டுபிடியுங்கள், புதுப்பியுங்கள்’ என்பதை மையப்படுத்தி கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் குடும்ப நல பணிக்குழு ‘ஆழத்தில் போடுங்கள்’ எனும் கருபொருளில் ஆங்கிலத்தில் பயிற்சியொன்றை மேற்கொண்டது. லூக்கா 5:4-6-ல் இருந்து எடுக்கப்பட்ட இந்த நற்செய்தி பகுதியானது மீன் பிடித்தலைப் பற்றிய ஒரு வல்ல செயலை மட்டுமல்ல, மாறாக ஆன்மாக்களை மீட்டெடுக்கும் மறைப்பரப்பையும் திருஅவை கொண்டிருக்கும் மறைபரப்பு பணியையும் நினைவுப்படுத்துவதாகவும் உள்ளது என்பது உணரப்பட்டது.

மேற்கண்ட பயிற்சியானது, எஸ்தர் மற்றும் இப்பணிக்குழுவின் உதவித் தலைவராகிய செல்வா அவர்களின் ‘மறைபரப்பு’ என்பதன் விளக்கத்தோடு பயிற்சி தொடங்கியது. இதைப் பற்றிய கருத்துரைக்கையில், ”நம் குழந்தைகளும் நாமும் விண்ணகத்திற்குச் செல்வதை உறுதிசெய்வது அல்லது குறைந்தபட்சம் விண்ணக வாழ்விற்கு தகுதி பெறுவதை உறுதிசெய்வது நமது கடமையாகும் என்றனர்.

தொடர்ந்து, திருஇருதய ஆண்டவர் பங்கின் பங்குத்தந்தை அருள்பணி. எட்வின் பீட்டர் அவர்கள், மறைத்தூதுரை (mission) மற்றும் நற்செய்தி அறிவிப்பு (evangelization) ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை எடுத்துரைத்தார். இதில், மறைத்தூதுரைப் பணியானது, பள்ளிக்கூடங்கள், உடல் நல மையங்கள் போன்றவற்றை உள்ளடக்கியது ஆகும் என்றார். ஆகவே, திருஅவை எனும் வகையில், ஒவ்வொரு கத்தோலிக்கரும் மறை பரப்புப் பணியில் ஈடுபட வேண்டும் என்றார்.

அருள்பணி எட்வின் அவர்கள் மேலும் கூறுகையில், “கடவுளுடைய வேலையைச் செய்வது வெறுமனே கடவுளுடைய வார்த்தையைப் பரப்புவது மட்டுமல்ல, நம் அன்றாட வாழ்வில் நம் குழந்தைக ளுக்கும், குடும்பங்களுக்கும் அண்டை வீட்டாருக்குமாக எளிய சேவை மற்றும் கொடுத்துதவுதலில் கடவுளின் சேவை அடங்கியுள்னது என்றார்.

குடும்பங்களின் பங்களிப்பைத் தொட்டு கருத்துரைக்கையில், சிறியவர்கள் முதல் முதியவர்கள் வரை அனைவரும் குடும்ப நல பணிக்குப் பங்களிக்க முடியும் என்பதை வலியுறுத்தினார்.

*(தமிழாக்கம் : ஆர்.கே)*

## உரோம் புனித யோவான் இலாத்தரன் பெருங்கோவில்



புனித யோவான் இலாத்தரன் பெருங்கோவில், உரோம் நகரில் அமைந்துள்ள நான்கு முக்கிய பெருங்கோவில்களில் ஒன்று. இது, நான்காம் நூற்றாண்டில் உரோமைப் பேரரசர் கொன்தாந்தின் (Constantine) அவர்கள் கிறிஸ்தவராக மாறி, திருத்தந்தை சில்வெஸ்டர் அவர்களிடம், அவர் திருமுழுக்குப் பெற்ற இடத்தில் எழுப்பப்பட்டுள்ளது. இது, 897-ம் ஆண்டில் நிலநடுக்கத்தாலும், 1307 மற்றும், 1361-ம் ஆண்டுகளில் தீ விபத்துக்களாலும் சேதமடைந்து, மீண்டும் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. ஐரோப்பாவில் மிகப் பழமையான ஆலயமாக விளங்கும் புனித யோவான் இலாத்தரன் பெருங்கோவில், உரோம் மறைமாவட்டத்தின் தலைமை ஆலயமுமாகும். இது, உரோம் மறைமாவட்டத்தின் ஆயரும், கத்தோலிக்கத் திருஅவையின் தனிப்பெரும் தலைவருமாகிய திருத்தந்தைக்குரிய பேராலயமாக அமைந்திருப்பதால், உலகிலுள்ள ஆலயங்களுக்கெல்லாம், தாய் ஆலயமாகவும் கருதப்பட்டு வருகிறது.

## வல்லமையோடும் மாட்சியோடும் வரும் ஆண்டவரை எதிர்கொள்வோம்!

இந்த திருவழிபாட்டு ஆண்டின் இறுதியை நெருங்கிவிட்டோம். அடுத்த வாரம் கிறிஸ்து அரசர் திருவிழாவையும் அதனைத் தொடர்ந்து திருவருகை காலத்தையும் புதிய திருஅவை ஆண்டையும் வரவேற்க இருக்கிறோம். இந்நிலையில் இன்றைய வாசகங்கள் இறுதிக் கால எச்சரிக்கையாக அமைகிறது. அவை அச்சமூட்டுபவையாகவும் உள்ளன.

இன்றைய முதல் வாசகமானது, “இறந்து போய் மண்புழுதியில் உறங்குகிற அனைவரும் பலர் விழித்தெழுவர்; அவருள் சிலர் முடிவில்லா வாழ்வு பெறுவர்;வேறு சிலரோ வெட்கத்திற்கும் முடிவில்லா இழிவுக்கும் உள்ளாவர்” என நமக்கு எச்சரிக்கை கொடுக்கிறது. இது நமக்கு அச்சமூட்டும் வாசகமாக உள்ளது. ஆனால் முடிவில்லா வாழ்வு பெறுவோர் மத்தியில் நாமும் இருப்போம் என்ற ஆறுதலையும் தருகின்றது.

திருநூலை உற்று நோக்கினால், நிராகரிக்கப்பட்டோருக்காக ‘நரகம்’ இருக்கிறது என்பது புலனாகும். அதே வேளை, திருநூல் அதற்கு அதிக கவனமோ முக்கியத்துவமோ கொடுக்கவில்லை என்பதும் புலனாகும். நம்மீது கடவுள் ‘மாறாத அன்பு’ வைத்திருப்பதை திருநூல் குறிப்பிட்டு சுட்டிக்காட்டுகிறது. அனைவரும் மீட்கப்பட வேண்டும் என்பது கடவுளின் ஆசை. அவரே மீட்புக்கான பாதையை அமைத்துக் கொடுத்து வழிகாட்டியுள்ளார்.

இரண்டாம் வாசகத்தில் இயேசுவே எக்காலத்திற்கும் தலைமைக்குரு, சிலுவையில் அவர் செலுத்திய ஒரே பலி, நம் பாவங்களைத் துடைத்துவிட்டது எனக் கூறுகிறது. ஒவ்வொரு திருப்பலியிலும் அந்த ஒரே பலியில் நாம் பங்குகொள்ளவதால், பாவிகளாகிய நமது மீட்புக்கு அதுவே சிறந்த வழிகளில் ஒன்றாகவும் அமைகிறது.

நற்செய்தி ஆண்டவரின் இறுதி வருகை பற்றி கூறுகிறது. ஆனால், நாளும் வேளையும் தந்தையையன்றி யாரும் அறியார் என்ற புதிரையும் விடுக்கிறது. இது நம்மை தயார் நிலைக்கு அழைக்கிறது. இயேசு போதித்தார், கற்பித்தார். இவற்றையெல்லாம் கோவிலில் செய்தார். பின்னர் கைது செய்யப்பட்டார். அனைவரும் கைவிட்டு ஓடினர். இயேசு விசாரிக்கப்பட்டு, குற்றவாளி எனத் தீர்ப்பிடப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு இறந்த போது, எல்லாம் சூனியமானது. இருள் கவ்வியது, நம்பிக்கை சிதறியது. “மிகுந்த வல்லமையோடும் மாட்சியோடும்” இயேசு வருவார்.

ஆகவே, எப்போதும் விழிப்பாய் இருக்க வேண்டும். இதுவே இன்றைய இறை வார்த்தை எடுத்துரைக்கும் முக்கியமான செய்தியாக இருக்கின்றது. மானிட மகன் எப்போது வேண்டுமானாலும் வரலாம். அதற்காக நாம் விழிப்பாய், ஆயத்தமாய் இருக்கவேண்டும் என்பதுதான் நாம் புரிந்துகொள்ளவேண்டிய செய்தியாகும். பல நேரங்கில் நாம் போதுமான நேரம் இருக்கின்றபோது அதனைப் பயனில்லாமல் கழித்துவிட்டு, கடைசி நேரத்தில் தத்தளிக்கின்றோம். கிறிஸ்தவ வாழ்விற்கு அத்தகைய மெத்தனப் போக்கு கூடவே கூடாது. கிறிஸ்துவின் வழியில் நடக்கும் நாம் எப்போதும் எதற்கும் ஆயத்தமாக இருக்க வேண்டும். இது காற்றுள்ள காலம். தூற்றிக்கொள்ள முற்படுதல் அறிவுடைமையாகும்.

இன்றைய நாள் உலகம் முழுவதும் ‘ஏழைகளின் தினமாக’ நினைவுகூரப்படுகிறது. ஏழைகளை உதறிவிட்டு, அவர்களை மையப்படுத்தாத திருஅவை மேற்கொள்ளும் விழாக்கள் பயனற்றவை. அவ்வாறான பலிகள் கடவுளுக்கு அருவருப்பானவைகள் என்றும் கூறலாம். எனவே வீணான ஆடம்பரங்களில் திளைத்து விடாமல், நாம் கருதும் இயேசுவை அல்ல, ஏழையின் சிரிப்பில் மகிழ்வுறும் இயேசுவை நம்பில் கொண்டிருப்போம்.

*-அந்தோணி இன்னாசி, ஸ்ரீ கெம்பாஙான்.*

### பொதுக்காலம் 33-ஆம் ஞாயிறு

| | |
|---|---|
| 1-ம் வாசகம்: | தானி 12:1-3 |
| தி. பாடல்: | 16: 5,8. 9-10. 11 |
| 2ம் வாசகம்: | எபி. 10: 11-14, 18 |
| நற்செய்தி: | மாற்கு 13: 24-32 |

ஞாயிறு வாசகம் ஆண்டு 2
வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 1
திருப்புகழ் மாலை -வாரம் 1